மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கிய விலையில்லாப் பொருட்களையெல்லாம் பெற்று, டாப்செங்காட்டுப்பட்டியில் திருச்சி மாவட்டத்திலே அரசுப் பள்ளிகளில் இரண்டாவது இடத்தை அந்தப் பள்ளி பெற்றிருக்கின்றது. மேலும், பல ஊர்களிலிருந்தும், சேலம் மாவட்டத்தில் இருந்துகூட வந்து அந்தப் பள்ளியில் குழந்தைகள் கல்வி பயில்கின்றார்கள். அவர்களுக்குத் தங்கும் விடுதி, இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சில் கட்ட பரிந்துரை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

மீன்பிடித் துறைமுகம்

***35952—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் கடற் பகுதியில் மீன்பிடித் துறைமுகம்

அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பும் திசையெல்லாம் தெய்வமாக நிற்பவரே! காணும் இடமெல்லாம் கருணை மழை பொழிபவரே! ஏங்கி நின்ற மீனவ மக்களைத் தாங்கி நிற்கின்ற கருணைக் கடவுள் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் பகுதி கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பெரிய ஊராட்சி. திருமுல்லைவாசல், தொடுவாய், கூழையாறு ஆகிய கிராமங்களில் மீன்பிடித் தொழில் பிரதானத் தொழிலாக உள்ளது. அங்குள்ளவர்களில் சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சுனாமி பேரலை ஏற்பட்டதற்குப் பின்பு விளைநிலத்தின் தன்மை மாறிவிட்டதால் அந்தப் பகுதியில் விவசாயம் குறைந்துவிட்டது. எனவே, விவசாயிகளும் மற்ற தொழில் செய்பவர்களும் மீன்பிடித் தொழிலைச் செய்து வருவதால், மீனவ மக்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கையாகக் கருதி, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, சிறிய துறைமுகமாவது அமைக்க மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாசல், அதனைச் சுற்றியுள்ள ஆறு மீன்பிடி கிராமங்களான தொடுவாய், கூழையாறு, கீழமூர்க்கரை, மேலமூர்க்கரை மற்றும் கீழக்கரை ஆகிய*

2014 ஜூலை 21]

கிராமங்களில் 21 விசைப் படகுகளும், 284 FRP *அதாவது* Beach Landing Craft *சிறிய மீன்பிடிப் படகுகள் மட்டுமே உள்ளன. இவற்றை நிறுத்துவதற்கு ஏதுவாக திருமுல்லைவாசல் பகுதியில் உள்ள உப்பனாற்று முகத்துவாரத்தை நிலைப்படுத்தும் பணிக்கு ரூ.8.03 கோடி மதிப்பில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்படகுகள் பாதுகாப்பாகச் சென்றுவர முகத்துவாரத்திற்குத் தெற்குப் பகுதியில் 250 மீட்டர் நீளத்திற்கு கருங்கல் அமைத்து, வடக்குப் பகுதியில் பொதுப் பணித் துறை மூலமாக ரூ.5.46 கோடி மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்புச் சுவரும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், முகத்துவாரத்திற்கு அணுகு சாலை அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. தூர்வாரும் பணியும் நடைபெற்று வருகின்றது. இப்பணி 2014 செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவடையும். மேலும், திருமுல்லைவாசல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விசைப் படகுகளை நிறுத்துவதற்கு அருகில் உள்ள பழையாற்றில் ரூ.31 கோடியே 20 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்ட மீன்பிடித் துறைமுகத்திலும் மற்றும் தற்போது ரூ.148 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கும் பூம்புகார் மீன்பிடித் துறைமுகத்திலும் நிறுத்திக்கொள்ள வழிவகை உள்ளதால், திருமுல்லைவாசல் கடற் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாசல் பகுதி மக்களினுடைய நலனில் அக்கறை கொண்டு, வருகின்ற காலங்களிலாவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, ஒரு துறைமுகத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், எங்களுடைய சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் சிறப்பாக இயங்கி வருகின்ற பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை

மேலும் நவீன வசதிகளுடன் விரிவுபடுத்த மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற திருமுல்லைவாசல் பகுதியில் எதிர்காலத்திலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இருக்குமாயின், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், புதுப்பட்டினம் கிராமத்திற்கு, அதாவது பழையாறு கிராமத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் ரூ.32 கோடியே 20 இலட்சம் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவர்கள் மீன்பிடித் துறைமுகத்திற்காக மீன் வளத் துறைக்கு வழங்கிய தொகை ரூ.193 கோடி மட்டும்தான். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013–2014 ஆம் ஆண்டு, இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.511 கோடியே 84 இலட்சம் வழங்கினார். அந்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பழையாறு மீன்பிடிக் கிராமத்திலுள்ள மீன்பிடித் துறைமுகம், நவீனப்படுத்தப்பட்ட மீன்பிடித் துறைமுகமாக இருப்பதால், மேலும் மீனவர்களுக்குத் தேவைப்படுகிற வசதிகள், அவர்கள் கோரினால், அதற்கேற்ப ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*